# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No.265/2022**

**Prosecution Witness - PW4**

| | |
|---|---|
| Name | :திரு. டாக்டர் சுப்பிரமணியன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused present.)

முதல் விசாரணை–

நான் தற்சமயம் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி அவசர சிகிட்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 24.09.2015 அன்று நான் பணியில் இருக்கும் போது 45 வயதான ஷைலஜன் என்வர் பிரசாத் என்பவர் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அன்றைய தினமே மதியம் 12.30 மணியளவில் தோட்டியோடில் உள்ள அவருடைய வயலில் வைத்து அவருக்கு தெரிந்து ஒரு நபர் வெட்டுக்கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது, இடது முன் கையில் வெளிப்பகுதியில் 6x1x0.2 cm அளவுள்ள கீறல் காயம் காணப்பட்டது. அவர் சிகிட்சை முடிந்து 08.10.2015 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று நான் சான்று அளித்தேன். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி காயம், ஒரு நபர் ஓடிப்போகும் போது கருவேல மரத்தின் முள் கீறினாலும், அது போன்று காயம் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படும் என்றால், சரிதான். நான் 24.09.2015 அன்று நான் மதியம் 1.30 மணியில் இருந்து நான் மருத்துவமனையில் பணியில் இருந்தேன். காயப்பட்ட ஷைலஜன் என்னிடம் சிகிட்சைக்கு வரும் போது மதியம் மணி 2.00 இருக்கும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,

**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 265/2022**
**Prosecution Witness - PW5**

| | |
|---|---|
| Name | : திரு.சுவாமிதாஸ் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2026.

(Accused is present)

முதல் விசாரணை–

நான் 31.05.2024 தேதி இரணியல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். அதற்கு முன்பு 24.09.2015 ம் தேதி இரணியல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியல் இருந்தேன். நானும், என்னுடன் காவலர் சுஜின்கானும் இருச்சக்கர வாகனத்தில் செல்லும் போது பகல் 10.30 மணிக்கு காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தோட்டியோடு கறுப்புகோடு பக்கம் நுள்ளியறை என்ற வயலில் 2 பேர் தகராறு செய்வதாக தகவல் கிடைத்தது. பகல் 11.00 மணிக்கு நாங்கள் அங்கு சென்ற போது, ராமராஜன் மற்றும் அவரது அண்ணன் இருவரும் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரையும், தகராறு செய்யாதீர்கள் காவல் நிலையத்தில் சென்று பேசிக் கொள்ளுங்கள் என்று நான் சொன்னேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவம் நடந்ததாக சொன்ன இடத்திற்கு சென்ற போது அங்கு எதிரியும் அவரது தம்பி ஷைலஜன் மட்டும் தான் இருந்தார்கள். பக்கத்தில் வேறு வீடுகள் கிடையாது. வயல் தான். அடியாள்களோ, வேலையாள்களோ எவரும் அங்கு இல்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரியின் கையில் அப்போது ஆயுதங்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான். நான் அங்கு சென்ற போது காலை 11.00 மணி இருக்கும். நான் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வர முயற்சி செய்யவில்லை என்றால், சரிதான். நான் செல்லும் போது அவர்களிடையே வாய்த்தகராறு நடந்து கொண்டிருந்தது. வாய்தகராறு அவர்களுடைய வயல் சம்பந்தப்பட்ட சொத்து பிரச்சனை என்ற விபரம் எனக்கு தெரியாது. அது பற்றி நான் விசாரிக்கவில்லை. நான் 11.00 மணிக்கு சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பெயரில் நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**